**Kalanjiyam - International Journal of Tamil Studies**
Volume: 5 | Special Issue | December 2024 | eISSN: **2456-5148**

‘ களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

# தமிழ்க் கிறித்தவச் சிற்றிதழ்களில் ஜீவநீரோடையின் உள்ளடக்கம்

# Content of Jeeva Neerodai in Tamil Christian Magazine

**சி.ஜீசஸ் ராயர்**

*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம் திருவாரூர்-610005, தமிழ்நாடு, இந்தியா*

**Jesus Rayar. S**

***Research scholar, Department of Tamil, Central university of Tamilnadu, Thiruvarur - 610005, Tamilnadu,India***

**Abstract:**

When Christianity was introduced in the Tamil environment, it took the literary forms of Tamil to establish itself and work in it. The magazine tradition emerged as an extension of the literary forms in the timeline. It is seen as a simple form that takes the ethics and experiences of contemporary life into account. In that situation, Jeeva Neerodai comes out as a monthly magazine that follows Christian life principles. The closeness of Christ is to improve individual morality. This magazine is doing the work of strengthening human society by telling the truth aloud and building straight thinking with the mantra of ``Say the truth and say it out loud". Word' became man. As the Holy Bible says, the word is powerful; the words of God, the Word, are flowing in the stream of life. The Jeeva Neerodai newsletter is published by Mr. Samson Paul as a monthly magazine from Puducherry. Jeeva Neerodai is a Christian newsletter that is doing its job of highlighting Christian truths in a clear way. This study aims to introduce such a Christian narrative and examine its contents.

**Keywords:**

Tamil Christian Magazine , Jeeva Neerodai, Tamil Christian, Christian literature

**திறவுச் சொற்கள்:**

தமிழ்க் கிறித்தவச் சிற்றிதழ், ஜீவநீரோடை, தமிழ்க் கிறித்தவம், கிறித்தவ இலக்கியம்

**ஆய்வுச் சுருக்கம்**

கிறித்தவம் தமிழ்ச் சூழலில் அறிமுகமாகிய போது தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்காக தமிழின் இலக்கிய வடிவங்களினை முன்னெடுத்து அதில் செயலாற்றியது. காலவரிசையில் இலக்கிய வடிவங்களின் நீட்சியாக சிற்றிதழ் மரபு என்பது தோற்றம் பெற்றது. அது சமகாலத்திய வாழ்வின் நெறிமுறைகளினையும் அனுபங்களினையும் எடுத்தியம்பும் எளிய வடிவமாக காணப்படுகிறது. அந்நிலையில் கிறித்தவ வாழ்வியல் நெறிகளை எடுத்தியம்பும் சிற்றிதழாக ஜீவநீரோடை என்பது வெளிவருகின்றது. கிறிஸ்துவின் நெருக்கமே தனிமனித ஒழுக்கம் மேம்படச் செய்யும் என்றும், உண்மையைச் சொல் அதனை உரக்கச் சொல் என்பதனை தாரக மந்திரமாகக் கொண்டு சத்தியத்தை உரக்கச் சொல்லி மனித சமுதாயத்தை நெறிப்படுத்தி வலுப்படுத்தி நேரியச்சிந்தனையைக் கட்டமைத்திடும் பணியை இவ்விதழ் செவ்வனே செய்து வருகின்றது. வார்த்தை மனுவுருவானார். வார்த்தை வல்லமை மிக்கது என்று பரிசுத்த வேதாகமம் எடுத்துரைப்பது போல வார்த்தையான தேவனின் வார்த்தைகள் ஜீவ நீரோடையில் விரவிக் கிடக்கின்றன. ஜீவநீரோடை சிற்றிதழ் சகோ.சாம்சன் பால் அவர்களால், புதுச்சேரியிலிருந்து மாத இதழாக வெளியிடப்படுகிறது.பல்வேறு வகையான சிற்றிதழ்கள் சமகாலத்தில் வெளிவரினும் கிறித்தவச் சத்தியங்களை உள்ளவாறே எடுத்துரைக்கும் அரும்பணியை தெளிந்த நற்றமிழில் ஆற்றிவரும் கிறித்தவச் சிற்றிதழாக ஜீவநீரோடை திகழ்கிறது. அத்தகைய கிறித்தவச் சிற்றிதழினை அறிமுகப்படுத்தி அதன் உள்ளடக்கங்களினை ஆராய்வதாக இவ் ஆய்வு அமையவிருக்கிறது..

**முன்னுரை:**

தமிழ் வளர்ச்சிக்கு வித்திட்ட வித்தகர் பலர் உளர். தமிழை உயிராய் நேசித்து தமிழுக்குத் தொண்டு செய்த கிறிஸ்துவ மறை போதகர்களும் அதில் உள ர். கிறிஸ்துவ நெறியே செந்நெறி எனக் கண்டு தெளிந்து கிறிஸ்துவுக்காய் வாழ்வதே பேரின்பம் என்பதை உணர்ந்து கிறிஸ்துவின் போதனையை ,உறக்கச் சொன்னவர் பலர் உண்டு இதில் தமிழறியா வித்தகர் சிலர் சத்தியத்தை அறிவிக்க மொழி தடையாய் இருக்கக் கூடாதென்றெண்ணி செம்மொழியாம் தமிழைக்கற்றுத் தேர்ந்து,தமிழால் மிளிர்ந்தனர் தமிழுக்குத் தொண்டு செய்தனர். கிறிஸ்துவின் போதனையைப் பறைச்சாற்றிட பேரிலக்கியங்களையும்,சிற்றிலக்கியங்களையும் படைத்து தமிழை வளப்படுத்திய

பெருமை அயல்நாட்டு மறை போதகர்களுக்கும் உண்டு. இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கத் திலிருந்து இன்றைய நாள் வரை உடலைப் பேணி உயிர் வளர்த்தேனே என்ற திருமூலரின் வாக்கிற்கிணங்க தமிழைப் பேணி கிறிஸ்துவ மறை வளர்த்தேனே என்பதற்கியைந்து சிற்றிதழ்கள் பல உருவாகின. அந்தச் சிற்றிதழ்கள் பலவற்றுக்கும் கிறிஸ்துவின் வார்த்தையே கருவாகின. அத்தகையச் சிற்றிதழ்களில் இறையியல் சிந்தனையும் சமூகச் சிந்தனையும் ஒருங்கே காணப்படும் சிற்றிதழாக ஜீவநீரோடை காணப்படுகிறது.

**தலையங்கம் காட்டும் அறம்:**

இதழின் தலையங்கம் என்பது நம்மைச் சுற்றி ஒவ்வொரு நாளும் நடை பெறுகின்ற சம்பவங்கள் எப்படிப்பட்ட ஒரு பயங்கரமான உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நினைப்பூட்டும் வகையில் அமைகின்றது. தேவ உறவுடனும் தேவ வார்த்தையுடனும் வாழ்கின்ற மக்கள் மட்டுமே பலவிதங்களில் தங்களைப் பாதுகாக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றனர். வேதாகமத்தை வாசித்தறியும் வாய்ப்பைப் பெற்ற பலர்கூட தாங்கள் அறிந்தவைகளை சார்ந்து சிந்திக்கும் பழக்கமில்லாதிருக்கின்றனர். ஜனங்கள் வார்த்தைகளைப் பகுத்தறியவில்லை. போதனைகளைச் சோதித்தறியவில்லை. பல போதகர்கள் சத்திய வார்த்தையோடு வந்து சத்தியத்தில் வழிநடத்தவில்லை இதனால் மாய்மால கிறிஸ்தவர்களும் வஞ்சிக்கப் பட்ட கிறிஸ்தவர்களும் பெருகுகின்றனர் என்பதனை கிறித்தவக் கோட்பாட்டு நிலையில் விளக்குவதாய் அமைகின்றது. இதை விழிப்புணர்வூட்டும் அறமாகக் கொள்ளலாம்.

மேலும் வலைதளங்கள் வாயிலாக எளிதாகப் பல விஷயங்களைப் பெற்றுக்கொள்வதற்குக் கிடைத்த வாய்ப்பு நல்லதே. ஆயினும் நாம் சிந்தித்து பார்க்கும் நல்ல பழக்கத்தை இழந்து விடக் கூடாது என்று இதழாசிரியர் சாம்சன் பால் அறன் வலியுறுத்துகிறார். தேசத்தில் படுகொலைகள் நடக்கின்ற விதங்களும், பெருகி வருகிற தற்கொலைகளும், இனரீதியான மோதல்களும் தினமும் நெஞ்சைப் பதறவைக்கின்றன. ஒழுக்கக் கேடான செயல்கள் தொடர்பான தினசரி செய்தி மனித இனம் இந்த அளவுக்கு ஒழுக்க உணர்வுகளை இழந்துவிட்டதை எண்பிக்கின்றன என்பதை ஆசிரியர் சுட்டிக் காட்டி மனித நேயத்தைப் போதிக்கிறார்.எங்கும் இருள் சூழ்ந்துள்ள இந்த நாள்களில் ஏன் இப்படி? என்ற கேள்வியை விட, நாம் இதன் நடுவில் வெளிச்சமாயிருப்பதே மிகப் பெரிய

தேவையாக உள்ளது என்று அறத்தை வலியுறுத்துகின்றார் இதழாசிரியர் சாம்சன் பால்.இவ்வாறான நிலையில் தலையங்கப் பகுதி கிறித்தவம் பேசத் தவறிய விடயங்களினை எடுத்துரைப்பதாக அமைகின்றது.

**நெறிப்படுத்தும் அட்டையின் முகப்போவியம்:**

ஜீவநீரோடையின் உயிரோட்டமாய் திகழ்வது முன்பக்க அட்டையில் முத்தான கருத்துக்களை முத்தாரமாய் பதித்திருப்பதுதான்.**சத்தியத்தை நேசிக்கிறவன் தனக்குப் பின்னால் எவ்வளவு பேர் வருகிறார்கள் என்பதை அல்ல. தனக்கு முன்னால் கர்த்தர் செல்கிறாரா என்பதையே பார்க்கிறான்,தேவனுடைய பாதையில் கஷ்டங்கள் பல உண்டு. ஆயினும் வாழ்க்கையை வீணாக்கும் நஷ்டங்கள் இல்லை,எப்படி வாழ வேண்டும் என்று கற்பிப்பவன் ஆசிரியன் அப்படியே வாழ்ந்து காட்டுகிறவன் போதகன்(சாம்சன் பால்** ) என்கிற விழிப்புணர்வுக் கருத்துக்கள் இடம் பெறுகின்றன.இவை அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே உச்சிமீது வானிடிந்து விழுகின்ற போழிலும் என்ற மகாகவி பாரதியின் நாங்கூரம் பாய்ச்சி நர்த்தனமிடும் வரிகள் போல நம்மில் நிழலாடிச் நிற்பதாய் அமைகின்றன.மேலும் பயம் போக்கும் சிந்தனைகளினை வழங்கி, திடப்படுத்தி மன இருள் நீக்கி தெளிவடையச் செய்து நம்பிக்கையை விதைக்கும் வகையில் திகழ்கிறது.இவை மனித நேயம் துளிர்த்திட தூண்டு கோலாய் இலங்கும் என்பது திண்ணம். முகப்பில் காணும் முத்தான கருத்துக்களில் புதுக்கவிதையின் தாக்கத்தை உணர முடிகிறது. ஜீவநீரோடை இதழின் உள்ளே இருக்கும் கருத்துப் பெட்டகங்கள் நினைவலைகளில் காணாமல் மறைந்து போனாலும் முன்பக்கச் சிந்தனை நம்மை உறங்க விடாது விழிப்புணர்வூட்டும் வகையில் அமைந்திருக்கின்றன.

**இதழ் காட்டும் அகம்:**

இதழின் உள்ளே வாழ்வை செம்மைப் படுத்தும் அறநெறிகள் நீக்கமற நிறைந்து விரவிக்கிடக்கின்றன. எது ஆசிர்வாத வாழ்க்கை என்பதைத் தெளிவுபடுத்துகிறது. கனியுள்ள வாழ்வைப் பிரதிபலிக்க வேண்டும் எனவும்,கிறிஸ்தவம் பேச்சில் அல்ல செயலில் என்பதையும் படம் பிடித்துக் காட்டுகின்றது. உள்நாட்டுச் செய்திகளையும், வெளி நாட்டுச் செய்திகளையும் இரத்தினச் சுருக்கமாய் வெளியிட்டிருப்பது இதன் தனிச் சிறப்பாகும்.விவிலிய மாந்தர்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைக் கூறி, இந்த சம்பவங்கள் கூறும் சங்கதி என்ன என்று இற்றைய நமது வாழ்வியலைப் பொருத்தி வாழ்க்கை நெறியைப் போதிக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளின் ஆசிர்வாதம் செல்வ

நிலைகளின் அடிப்படையில் கணக்கிடப் படுவதில்லை என்பதை உறுதிபடக் கூறுகின்றது. தீமையை ஏன் சகிக்க வேண்டும் என்பதையும் தீமைக்கும் பதில் நன்மை ஏன் செய்ய வேண்டும் என்பதையும் புரியவைக்கிறது

"உன் எதிரி பசியோடிருந்தால் அவனுக்கு உண்ணக் கொடு" என்ற விவிலியம் காட்டும் மன்னிப்பின் மாண்பையும் மகத்துவத்தையும் எடுத்தியம்பி விலங்கிலிருந்து மனிதன் மாறுபட்டவன்; குணத்தில் வேறுபட்டவன்; படைத்தவனின் சாயலைக் காண்பிக்க கடமைப்பட்டவன் என்பதை உணர்த்துகின்றது. இதைத் தான் செந்நாப்போதார் "**இன்னா செய்தாரை ஒருத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்**" என்று மாண்புற எடுத்தியம்புகின்றார்.(திருவள்ளுவர்) 'நன்னயம் செய்வது மனிதனின் மாண்பு,நன்னயம் செய்பவனால் மட்டுமே மகிழ்ச்சி நிறைந்த ஆசிர்வாத வாழ்க்கை வாழமுடியும் என்பதை ஜீவநீரோடை இதழ் எடுத்தியம்புகிறது

**முடிவுரை:**

பேரிலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் வாழ்வைச் செம்மைப் படுத்தும் அறக் காரணிகளை தன்னுள் எவ்வாறு பொதிந்து வைத்திருக்கிறதோ அதைப் போலவே தமிழ் வாழும் வரை சிற்றிதழ்களின் தாக்கம் நம்மில் என்றும் இருக்கும். அத்துணை சிற்றிதழ்களின் தாக்கமும் வரிசை கட்டி நின்றாலும் கிறித்தவச் சத்தியத்தை சத்தியமாய் உரக்கச் சொல்லும் இதழாக ஜீவ நீரோடை திகழ்கிறது.தேவ உறவுடனும் தேவ வார்த்தைகளுடனும் வாழ்கின்ற வாழ்க்கை முறையே கிறிஸ்துவ வாழ்க்கை என்பதை தெளிவுபடுத்தி ஆட்டம், பாட்டம்,கொண்டாட்டம் மட்டுமே தேவனைத் திருப்தி படுத்த முடியாது. வார்த்தையான தேவனின் வார்த்தைபடி வாழ்வதே வாழுங்கலையின் இரகசியம் என்பதை புரிந்திடவும், உணர்த்திடவும் செய்யும் வகையில் இவ்விதழின் உள்ளடக்கம் அமைகின்றது.

**துணைநூற் பட்டியல்:**

1. சாம்சன் பால்,( 2023), ஜீவநீரோடை , ஜீவநீரோடை பதிப்பகம்.புதுச்சேரி
2. ஜான்சாமுவேல்.ஜி, கிறித்தவத் தமிழிலக்கியம் – சில பார்வைகள், (2005), ஹோம்லாண்ட் பதிப்பகம், சென்னை
3. பரிசுத்த வேதாகமம், (2014), விவிலியம்- தமிழ்ப் பண்பாடுகள் ஆய்வு நடுவம், புதுவை உயர் மறைமாவட்டம் ,
4. வரதராசனார்.மு (1940), திருக்குறள் தெளிவுரை, கழக வெளியீடு

. This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.